1417

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
### முதலாந் தவணைப்பரீட்சை – 2016
### சைவநெறி

சுட்டெண் :................................................ தரம் : 9 நேரம் :- 2 மணி

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "பாரொடு விண்ணால் பரந்த எம் பரனே"என்பதில் பரனே எனக் குறிப்பிடப்படுபவர்

1.விநாயகர் 2.விஷ்ணு 3.சிவபெருமான் 4.முருகன்

2) இறைவனின் குருவடிவம் எனப் போற்றப்படுவது

1.நடராஜர் 2.சிவலிங்கம் 3.சிவபெருமான் 4.தெட்சணாமூர்த்தி

3) ஆதிகால மக்கள் "மருதல்" என எதனை அழைத்தனர்

1.நீர் 2.காற்று 3.தீ 4. சூரியன்

4) சைவசமயத்தின் அடிப்படையாக அமைவது

1.கிரியை 2.அன்பு 3.தியானம் 4.யோகம்

5) அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்பதில் குறிப்பிடப்படும் நற்பண்பு

1.பொறுமை 2.அன்பு 3.அறம் 4.கொடை

6) அந்தியேட்டி என்பதன் பொருள்

1.சுண்ணமிடித்தல் 2.அஸ்திசஞ்சயனம் 3.கடைசியாகம் 4.ஆண்டுத்திகதி

7) 2016ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டின் பெயர்

1.பிரபவருடம் 2.மன்மதவருடம் 3.துர்முகிவருடம் 4.பரிதாபிவருடம்

8) "மகரசங்கிராந்தி" என்று அழைக்கப்படும் பண்டிகை

1.போகிப்பண்டிகை 2.தைப்பொங்கல் 3.பட்டிப்பொங்கல் 4.கானும்பண்டிகை

9) அட்ட மூர்த்தங்களில் "இயமானன்" என்பதன்

1.சூரியன் 2.சந்திரன் 3.ஆன்மா 4.வானம்

10) ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய் எனப் பாடியவர்

1.திருஞானசம்பந்தர் 2.திருநாவுக்கரசர் 3.சுந்தரமூர்த்திநாயனார் 4.மாணிக்கவாசகர்

11) சிவபெருமான் லிங்கத்தில் தோன்றிய நாள்

1.தீபாவளி 2.சிவராத்திரி 3.திருவாதிரை 4.திருவெம்பாவை

12) வைகுண்ட ஏகாதசி வரும் மாதம் எது

1.கார்த்திகை 2.மார்கழி 3.பங்குனி 4.சித்திரை



kalvi.lk

13) சிவராத்தியின் நான்காம் சாமம் சாற்றப்படும் பட்டு

1.செம்பட்டு 2.மங்சள்பட்டு 3. வெண்பட்டு 4. நீலப்பட்டு

14)உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று பாடியவர்

1.விவேகானந்தர் 2.ஆறுமுகநாவலர் 3.மகாத்மாகாந்தி 4.விபுலானந்தர்

15) சங்கர சங்கிதை எனும் நூலில் சிறப்பிக்கப்படும் விரதம்

1.சிவராத்திரி 2.நவராத்திரி 3.திருவாதிரை 4.ஏகாதசி

16) பஞ்சதோத்திரங்களில் நான்காவதாகப் பாடப்படுவது

1.திருவாசகம் 2.திருவிசைப்பா 3.திருப்பல்லாண்டு 4.பெரியபுராணம்

17) காதலாகி கசிந்து என்னும் பாடலின் பண்

1.காந்தாரபஞ்சமம் 2.கௌசிகம் 3.பழம்பஞ்சமம் 4.நட்டபாடை

18) மகாளய காலத்தை வரையறை செய்க.

1. புரட்டாதி அமாவாசைக்கு முன் 15 நாள் 2. புரட்டாதி அமாவாசைக்கு பின் 15 நாள்

3. ஐப்பசி பூர்வபக்கம் முன் 15 நாள் 4. .ஐப்பசி அபரபக்கம் பின் 15 நாள்

19) கோயிலுக்கு சிறப்பையும் அழகையும் கொடுப்பது

1.துாயலிங்கம் 2.சுயம்புலிங்கம் 3.சிவலிங்கம் 4.பத்திரலிங்கம்

20) பாடசாலை மூலம் வளர்க்கப்படும் நற்பண்புகள்

1. சுத்தம் பேணுதல் 2. பணிவு 3. சகோதரத்துவம் 4. மேற்கூறிய யாவும்

20 X 2 = 40

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) பின்வரும் தேவாரங்களுள் இரண்டை வரிக்கிரகமாக எழுதுக. அப்பாடலின் பண் , பாடியவர் , தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

1) துஞ்சலும் துஞ்சலில்லாத..............
2) காதலாகி கசிந்து .........
3) ஓசை ஒலியெலம் .....
4) ஏழிசையாய் இசையாய் ............

02) இந்துமதம் இயற்கையிலே இறைவனைக் காண்கின்றது

1)நாம் இன்னும் இயற்கைச் சக்திகளை வணங்கின்றோம் என்பதற்கு மூன்று சான்று தருக.

2)நாயன்மார்கள் இயற்கைச் சக்திகளை பாடியுள்ளார்கள் என்பதற்கு மூன்று ஆதாரம் தருக.



kalvi.lk

3)இறைவனின் அட்டமூர்த்தங்களைத் தருக.

4)முச்சுடர்கள் எவை?

03) "காலையும் மாலையும் கடவுளை வணங்கு"

1)பாடசாலை எவ்வாறு சமயத்தை வளர்க்கின்றுத மூன்று ஆதாரம் தருக.

2)குரு பூசையின் நோக்கங்கள் மூன்று தருக.

3)இஷ்டதெய்வத்தையும் குலதெய்வத்தையும் வேறுபடுத்துக.

4)நாம் நாளாந்தம் செய்ய வேண்டிய நற்கருமங்கள் நான்கு தருக.

04) வீட்டுக்கிரியைகளில் அபரக்கிரியை முதன்மையானது.

1)அபரக்கிரியைகள் நான்கு தருக.

2)அந்தியேட்டியின் மூன்றுவகைகளைத் தருக.

3)சிரார்த்தப் பிண்டம் பிடிப்பதற்கு தேவையான பொருட்கள் எவை?

4)தர்ப்பண முடிவிலே சொல்லப்படுவது யாது?

05) விரதமும் பண்டிகைகளும் உளத்தை தூய்மையாக்கும்.

1)விரதம் என்றால் என்ன வரையறை தருக.

2)பண்டிகை என்றால் என்ன?

3)திருக்கார்த்திகை விரதத்தின் நியதிகள் யாவை?

4)மருத்துநீர் தயாரிக்க தேவையான பொருட்கள் எவை?

Education கல்வி அධ්‍යාපන

06) திருமுறைகளை "தமிழ்வேதம்" எனவும் அழைப்பர்

1)திருமுறைகளை தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

2)அடங்கன் முறை என அழைக்கப்படுபவை யாவை?

3)திருமுறைப்பாடல்களை பாடும் முன்னும் பாடிய பின்னும் திருச்சிற்றம்பலம் என்று சொல்வது ஏன்?

4)திருமுறைகளை ஓதுவதால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக.

07) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1)சமய ஒழுக்காறுகளைப் பின்பற்றுவோம்

2)தலைமைத்துவம்

3)தீபாவளி

4)சிவராத்திரி விரதம் உணர்த்தும் தத்துவம்



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page